## திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக

# சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

### மாவட்ட செயலாளர் – முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை !

திருச்சி, ஆக. 2-

கழக இளைஞர் அணி செயலாளர், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கர்நாடகா அரசு மேகதாதுவில் காவேரியின் குறுக்கே அணை கட்டுவதை தடுத்து நிறுத்த வலியுறுத்தியும், தமிழ்நாடு அரசு விவசாயக் கடனை முழுவதுமாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தியும், தஞ்சையில் தி.மு.க. சார்பில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில்



கலந்து கொள்ள இன்று (02.08.2026 ஞாயிற்றுக்கிழமை) மாலை 07.00 மணியளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தர உள்ளார்கள். அவருக்கு திருச்சி விமான நிலையத்தில் திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும்.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர், வட்டம், வார்டு மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழகத் தொண்டர்கள், தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் .

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நாளை ஆர்ப்பாட்டம்!

# விவசாயத் தொழிலாளர் அணியினர் பல்லாயிரக்கணக்கில் பங்கேற்போம்!

### கழக விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் அ. சிவா வேண்டுகோள்!

தஞ்சை, ஆக. 2-

விவசாயத்தை வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து நாளை (03.08.2026) தஞ்சையில் நடைபெறும் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் கழக விவசாய தொழிலாளர் அணியினர் பல்லாயிரக்கணக்கில் பங்கேற்பீர் என்று கழக விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் அ.சிவா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்தே மேகதாது அணை கட்டுவதில் கர்நாடக அரசு தீவிரம் காட்டி வருகிறது.

கர்நாடக அமைச்சர் ராமலிங்க ரெட்டி, கர்நாடக அரசின் டெல்லி பிரதிநிதி, கர்நாடக அரசின் தலைமை வழக்கறிஞர் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் மேகதாது அணை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, ஊடகங்களிடம் தொடர்ந்து மேகதாது அணையைக் கட்டியே தீருவோம் எனவும், தமிழ்நாடு அரசின் அனுமதி தேவையில்லை எனவும் பேசி வருகிறார்.

ஆனால் இதற்கு மாறாக, இவ்விவகாரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியதோடு தனது கடமை முடிந்து விட்டது என மவுனம் காத்து , தனது திரைப்படத்தின் வசூலை பெருக்க மார்க்கெட்டிங்க் செய்துவருகிறார்.

இந்தச் சூழ்நிலையில், காவிரியில் நமக்கு உரிய பங்கினை வழங்க காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டும், அதனை நிறைவேற்ற முடியாது என்று கர்நாடக மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் இன்னும் வாய் திறக்காமல் இருக்கிறார்.

இந்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கையினை ஏற்று விவசாய கடன் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டியும், மேகதாது அணை கட்டுவதை தடுக்க தவறியதை கண்டித்தும்




டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டியும், பயிர்க்கடன் தள்ளுபடி மோசடியை கண்டித்தும் மேகதாது பிரச்சினையை கைக்கட்டி வேடிக்கை பார்ப்பது மேட்டூர் அணையில் இருந்து ஜுன் 12 அன்று தண்ணீர் திறக்காதது காவிரிப் பிரச்சினையில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்ட மறுப்பது கர்நாடக முதல்வரைச் சந்திக்கப் போவதாக அதிகாரமற்ற தகவல்களை உலவவிட்டு ஆழம் பார்ப்பது என தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு துரோகத்துக்கு மேல் துரோகம் செய்யும் விளம்பர மாடல் த.வெ.க. அரசைக் கண்டித்து நாளை (03.08.2026-திங்கட்கிழமை) காலை 10.00 மணிக்கு தஞ்சை பனகல் கட்டிடம் அருகில் எதிர்க்கட்சித்தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் டெல்டா மாவட்டத்தை சார்ந்த திருச்சி, புதுக்கோட்டை, திருவாரூர், அரியலூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர்கள், முன்னாள் இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகி கள், விவசாய சங்க நிர்வாகிகள் பங்கேற்று கண்டன உரையாற்ற உள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயத் தொழிலாளர் அணியினர் பல்லாயிரக்கணக்கில் பங்கேற்கக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு விவசாய தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் அ.சிவா வேண்டுகோள் விடுத்துள்ளார்.




# வரும் காலத்தை வடிவமைத்திருக்கிறார்கள்!




தமிழ்த்தாய் வாழ்த்து தந்த
மனோன்மணீயம் சுந்தரனார் பெயருடைய
பல்கலைக்கழகத்திலேயே
"நீராரும் கடலுடுத்த..." பாடலுக்கு
மூன்றாவது இடம்!
அப்படியும் ஆளுநர் கையால்
பட்டங்களை வாங்க
மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!
இந்த ஆண்டு ஆகஸ்ட் 15,
விடுதலை நாள்விழா
கரப்பான் பூச்சிகளின்
வெற்றி விழாவும் கூட!

மல்லாக்க விழுந்தால்
திரும்ப முடியாமல்
கால்கள் நடுங்கும் கரப்பான் பூச்சிகள்,
மக்களாட்சிக்குப்
புதிய பாடம் கற்றுத் தந்துள்ளன.
மாறும் தலைமுறைகள்
சிந்தனைகளையும் மாற்றுகின்றன!
ஆனால் அநீதிக்கு எதிராக
அணி திரளும் பண்பில்
இடைவெளிகள் இருப்பதில்லை.

தேவை ஏற்பட்டால் தெருவுக்கு வரவும்,
அடக்குமுறைகளை அடக்கிக் காட்டவும்,
களத்தில் நின்றது மாணவர் கூட்டம்!
சமூக ஊடகங்களில் வாழ்க்கையைத்
தொலைக்கிறார்கள் என்ற
மூத்த தலைமுறையின்
முணுமுணுப்புகளுக்கு
முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது!
தொழில்நுட்பத்தின் கூட்டணியில்
தங்கள் வலிமையின் எண்ணிக்கையில்
விஸ்வரூபம் எடுத்திருக்கிறது!
பொழுதுபோக்கு ஊடகமாக
மாறிக்கொண்டிருந்த
சமூக ஊடகத்தை,
சமுதாய மாற்றத்திற்கான
உலகக் குரலாக
மாற்றிக் கொண்டிருக்கிறது!

எழுந்த குரலை
எதிர்கொள்ள முடியாமல்
அதிகாரச் செருக்கு மையங்களும்
அதிர்ந்து போயிருக்கின்றன!
இந்தப் போராட்டம்
தலைநகர் மாணவர்களின்
உணர்ச்சி வெளிப்பாடு மட்டுமல்ல;
உலகம் முழுவதும் ஏங்கும்
சமூக நீதி, நல்லாட்சி,
வெளிப்படைத்தன்மை,
சுற்றுச்சூழல், பொறுப்புணர்வு
ஆகியவற்றை
வற்புறுத்தும்
மக்களாட்சியின் மகத்துவமும் கூட!

"நீங்கள் உலகில் காண விரும்பும்
மாற்றமாக நீங்களே இருங்கள்"
என்றார் மகாத்மா காந்தி!
முயற்சி செய்திருக்கிறார்கள்
மாணவர்கள்!
அவர்கள் முயற்சி
நட்சத்திரங்களை இலக்காக்கி
நிற்கிற இடத்தையும்
கோட்டை விடுவதில்லை;

நட்சத்திரங்களையே வெற்றி கொள்வது!
'எனக்கு
நூறு இளைஞர்களைக் கொடுங்கள்;
இந்தியாவையே மாற்றிக் காட்டுகிறேன்"
என்றார் விவேகானந்தர்.
கொடுங்கள் என்று கையேந்தாமல்,
அவர்களுக்கு அவர்களே
கை கொடுத்து
அதிகார மேலாதிக்கத்தை
மாற்றியிருக்கிறார்கள்!

"இளைஞர்களே சிந்தியுங்கள்;
யாருடைய சொல்லையும்
அப்படியே நம்பாதீர்கள்" என்ற
பெரியாரின் மொழியாய்க்
களத்தில் நின்றிருக்கிறார்கள்!

"படித்த இளைஞர்கள்
தனக்காக மட்டுமல்ல,
சமுதாயத்திற்காகவும் வாழ வேண்டும்"
என்றார் கலைஞர்!
வரும் தலைமுறைக்காகவும்
தலைநகரில்
வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள்!
போராட்டம் என்பதே
இலக்கு இல்லை;
மாற்றத்திற்கான வழிமுறை!
வெற்றி என்பது
எதிரியை வீழ்த்துவதில் இல்லை.
அனைவருக்குமான
தீர்வைக் கண்டடைவது!

மாறி வருகிறது
மாணவர்களின் சமூகப் பொறுப்பு!
மக்களின் குரலை மதிக்கும்
ஆட்சியும்,
பொறுப்புணர்வுள்ள
மக்களும்தாம்
மக்களாட்சியின் பண்புகளை
மாண்புறச் செய்யும் என்பதை
மீண்டும் போராட்டம்
நினைவுபடுத்தியிருக்கிறது!
அவர்கள், போராட்டத்தால்
எதிர்காலத்தை உருவாக்கவில்லை!
காலம் இயற்கை.
காலத்தை உருவாக்க
யாராலும் முடியாதுதானே!
அதனால் அவர்கள்,
போராடியதால்
வரும் காலத்தை
வடிவமைத்திருக்கிறார்கள்!



அன்புடன்
**ம.ரா**



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அரக்கோணம் சட்டமன்ற தொகுதி சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் – முன்னாள் அமைச்சர் ஆர். காந்தி ஆலோசனை கூறி கருப்பு சிவப்பு, அவரும் நானும் ஆகிய புத்தகங்களை வழங்கினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.சிவானந்தம், துரைமஸ்தான், குமுதா குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணய்யன், அ.அசோகன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.